# பவுல் – தீமோத்தேயு பாடங்களை எவ்வாறு பயன்படுத்துவது

ஆரம்பித்தல்

ப–தீ பாடங்களை இலவசமாக www.paul-timothy.net. லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. **ப–தீ பயன்படுத்துவோர் பட்டியலில் இருந்து, உங்களுக்குத் தேவையான பாடத்தை எவ்வாறு தேர்ந்தெடுப்பது:**

- உங்கள் ஒருங்கிணைப்பாளரிடம் இருந்து பவுல்–தீமோத்தேயு பயன்படுத்துவோர் பட்டியலின் ஒரு நகலை பெற்றுக் கொள்ளவும். அல்லது www.paul-timothy.net லிருந்து ஒரு நகலை எடுத்துக் கொள்ளவும்.
- பாடங்கள் 16 ஊழியங்களாக (அறிமுகம் உட்பட) வகைப்படுத்தப்பட்டுள்ளன. சபையின் தற்போதைய தேவைக்கு ஏற்ப, ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு பாடத்தைத் தெரிந்து கொள்ளவும்.
- தேவைக்கு ஏற்ற பாடங்களைக் கொண்ட ஊழியம் எது என்பதை முதலில் கண்டறியவும். உதாரணமாக, ஒரு மாணவர் ஆராதனையைக் குறித்து அறிந்து தன்னை வளர்த்துக் கொள்ள விரும்பினால், அதற்குரிய பாடத்தை **ஆராதனை** என்ற தலைப்பின் கீழ் பட்டியலில் காண்க.
- ஒவ்வொரு ஊழியத்தைக் குறித்தப் பாடங்களையும் தனித்தனியாக வைக்கவும். அவற்றை எளிதாகத் தேடி எடுக்க இது வசதியாக இருக்கும்.

2. **பயன்படுத்துவோர் பட்டியலில் உள்ள ஊழியங்களில், வெவ்வேறு பொருள் பற்றிய பாடங்களின் தொகுப்புகள் அடங்கியுள்ளன.**

- ஒவ்வொரு ஊழியப் பகுதியிலும், பல பாடத் தொகுப்புகள் உள்ளன. உதாரணமாக, “ஆராதனை” குறித்த ஊழியத்தில், ஐக்கிய விருந்து, இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுதல், மற்றும் ஆராதனையின் பிற அம்சங்கள் ஆகிய தொகுப்புகள் அடங்கி உள்ளன.
- ஒவ்வொரு தொகுப்பிலும் மேய்ப்பர்களுக்கும், பிள்ளைகளுக்கும் தனித்தனி பாடங்கள் உண்டு. இந்த இரண்டு பாடங்களும் ஒரே பொருளையே ஆராயும். பெரியவர்கள் கற்கும் ஒரு பொருளுக்கு தொடர்புடைய வேதாகமக் கதையை முன்கூட்டியே ஆயத்தப்படுத்த சிறுவர்களுக்கு இது உதவியாய் இருக்கும். ஆராதனை நேரத்தில் பிள்ளைகள் இந்தக் கதையைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டலாம்.
- மேய்ப்பர்களுக்கு உரிய பாடத்தின் மேல் பகுதியில் “மேய்ப்பன்” என்ற வார்த்தை இருக்கும். அவர்களுடைய பாட எண் “a” யுடன் முடிவடையும். (உ–ம்) “Ala”.
- பிள்ளைகளுக்கான பாடத்தின் மேல் “பிள்ளைகள;” என்ற வார்த்தை இருக்கும். அவர்களுடைய பாட எண். “b” யில் முடியும் (உ–ம்)”Alb”
- சில தொகுதிகளில் துணைப்பாடங்கள் உண்டு. படிக்கும் பொருள் பற்றி கூடுதல் விவரங்கள் அவைகளில் இருக்கும் இந்தப் பாடங்கள் c,d,e என்ற எழுத்துக்களால் முடியும்.
- புதிய மேய்ப்பர்களின் பாடங்கள், அடுத்த வாரத்துக்குரிய செயல்பாடுகளையும், அடுத்த ஆராதனையையும் திட்டமிட உதவி செய்யும்.

3. **ìஆரம்பித்தல்î பாடங்களை உபயோகித்து, ப–தீ தலைவர் பயிற்சியை தொடங்கவும்.**

- **பயிற்சியாளர்கள்** “புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிக்கும் வழிகாட்டுதல்” என்பதை பயன்படுத்தவும். www.paul.-timothy.net. பாட எண் AOf.
- **ஆயர் படிப்பு மாணவர்கள்** ‘பயிற்றுவிக்கப்படும் புதிய மேய்ப்பர்களுக்கான வழிகாட்டுதல்’ என்பதை உபயோகிக்கவும். எண் AOa.
- எல்லா புதிய மேய்ப்பர்களுக்னா பாட எண்களும் ‘a’ என்ற எழுத்தோடு முடியும்.
- **பிள்ளைகளுக்கான ஆசிரியர்கள்** பயன்படுத்த வேண்டியது “பிள்ளைகளுக்கான ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்” எண் Aob.
- எல்லா பிள்ளைகளுக்கான பாடங்களும் ‘b’ என்ற எழுத்தோடு முடியும்.
- **ஆராதனையை வழிநடத்துவோர்** உபயோகிக்க வேண்டியது, ‘குழு ஆராதனையை வழிநடத்துவோருக்கான வழிகாட்டுதல்’ எண் AOe.


- **பிற பணியாளர்கள்** உபயோகிக்க வேண்டியது, மூப்பர்கள், சிறுகுழுத் தலைவர்கள், வாரந்தோறும் நடவடிக்கைகளை வழிநடத்தும் பிறர் ஆகியோருக்கான வழிகாட்டுதல" எண் aOd.
- பவுல்-தீமோத்தேயு பயிற்சியை துவக்கும் பணிக்களத்தை வழிநடத்தும் **ஒருங்கிணைப்பாளர்கள்** பயன்படுத்த வேண்டியது, 'பவுல்-தீமோத்தேயு பணிக்கள குறிப்புகள்' www.paul-timothy.net. லிருந்த நீங்கள் இலவசமாக இதைப் பெற்றுக்கொள்ளலாம். இடது புறத்தில் 'பணிக்கள குறிப்பு' என்பதை கிளிக் செய்யவும்.

**4. ஒருவருக்கொருவர் உறவும் ஒத்துழைப்பும் கொண்ட ஆராதனை நடவடிக்கைகளைத் திட்டமிட ப-தீ பாடங்கள் உங்களுக்கு உதவுகிறது.**

குழந்தைகள் உட்பட பலரும் பங்கு கொள்ளும் ஒரு குடும்பச் சூழ்நிலை நிலவும் ஆராதனை நேரத்தை ஆயத்தம் செய்ய பவுல்-தீமோத்தேயு பாடங்களைப் பயன்படுத்தவும். ஒருவருக்கொருவர் சமூக உறவு நிலவும் கூட்டங்களில் பரிசுத்த ஆவியானவர் இன்னும் வல்லமையாகக் கிரியை செய்வார்.

**5. ப-தீ பாடங்களை வசதியான பாக்கெட் அளவு படிவங்களில் அச்சிட்டுக் கொள்ளலாம்.**

எளிதாகப் பயன் படுத்தக் கூடிய படிவங்களில் பாடங்களைக் கொடுக்கவும். புதிய மேய்ப்பர் மற்றும் குழந்தைகளுக்கு பாடங்கள் ஒரே தாளில் அடங்க வேண்டும். இரு பக்கமும் இதை அச்சிடலாம். ஒரே தாளில் அச்சிடப்பட்டு நான்கு பக்கங்களைக் கொண்டதாக இது மடிக்கப்படும்.




உங்களுடைய தேவைகளை மையப்-படுத்தி புதிய ப-தீ பாடங்கள் எழுதப்படலாம்.

ப-தீ பாட எழுத்தாளர்களுக்கு உங்கள் தேவைகளைத் தெரியப்படுத்தினால், அவர்கள் அதற்கு ஏற்றவாறு பாடங்களை எழுத முயற்சி செய்வார்கள். உங்கள் தேவைகளை உங்கள் தலைவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர்கள் பவுல்-தீமோத்தேயு எழுத்தாளர்களுக்கு அதைத் தெரிவிப்பார்கள்.

- பவுல்-தீமோத்தேயு பாட திட்டம் ஒரு போதும் முற்றும் முடிந்ததாக இருக்காது. ஏனெனில், உங்கள் சபையின் தேவைகளைக் குறித்த அறிக்கைகளுக்கு ஏற்றவாறு பாடங்களில் புதியன சேர்க்கப்படும் பழையன திருத்தி எழுதப்படும்.
- ஆயத்தமானவுடன் துணைப் பாடங்களை பவுல்-தீமோத்தேயு வெளியிடும். www.paul-timothy.net. என்ற இணைய தளத்துக்கு அடிக்கடி விஜயம் செய்து இலவசமாக 'டவுண்-லோட்' செய்து கொள்ளலாம்.

**6. ப-தீ பாடங்களை நகல் எடுக்கவோ, மொழி பெயர்க்கவோ எந்தத் தடையும் இல்லை.**

- இந்தப் புத்தகத்தையும் அதில் உள்ள விஷயங்களை இலவசமாக நகல் எடுத்துக் கொள்ளலாம்: எந்த மொழியிலும் மொழி பெயர்த்துக் கொள்ளலாம்: எவ்வகையிலும் சேகரித்து வைத்துக்கொள்ளலாம்: இலவசமாகவும், பணத்துக்கும் விநியோகிக்கலாம். தயவு செய்து பின்வரும் அறிக்கையை சேர்த்துக் கொள்ளவும்:

Copyright © 2003 by Paul-Timothy

- இந்தப் பாடங்களை எந்த மொழியிலும் எப்பகுதியிலும் தயாரிக்கவும் சேகரிக்கவும், விற்கவும், விநியோகிக்கவும் யாருக்கும் தனியுரிமை (exclusive right) கிடையாது.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net.